# Salve Regina



**Society of St. Pius X**, Palayamkottai.
Tel:0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com


**ஏப்ரல் 2007 மலர்: 2 இதழ்: 4**
**(தனிச்சுற்றுக்கு மட்டும்)**


## "நானே நல்ல ஆயன்; நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிறான்" (அரு. 10:11)

சேசுவில் அன்பார்ந்த விசுவாசிகளே,

உயிர்த்த ஆண்டவரின் சமாதானம் உங்களோடு இருப்பதாக!

இவ்விதழ் உங்கள் கரங்களை வந்தடையும் சமயம் பாஸ்கு திருநாளுக்குப் பின் வரக்கூடிய இரண்டாவது ஞாயிறை அடைந்திருப்போம். இந்த ஞாயிறு "நல்ல மேய்ப்பன் ஞாயிறு" என்று அழைக்கப்படுகிறது. நமதாண்டவர் சேசு "நானே நல்ல ஆயன்" - "நல்ல மேய்ப்பன்" என்று தம்மையே அழைத்துக் கொள்கிறார். ஆம்! அவர் மெய்யாகவே நல்ல ஆயன். ஏனெனில் "நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிறான்" (அரு. 10:11). சேசு தமது ஆடுகளான நமக்காக தமது பிராணனைக் கொடுத்து நமக்கு மீட்பளித்த இரட்சகர் என்பதைக் கடந்து போன தவக்காலத்தின் முடிவில் கண்டோம். சிலுவை மரத்தில் நமக்காக உயிர் விட்ட அவரது அன்பை அறிந்தோம்.



நமதாண்டவர் நல்ல மேய்ப்பராக படங்களில் சித்தரிக்கப்படுவதை நாம் அறிவோம். இச்சித்திரங்களை உரோமையில் கல்லறைச் சுரங்கங்களின் சுவர்களில் இன்றும்கூட, நாம் காணலாம். இப்படி ஆதித் திருச்சபையில் வணங்கி, ஆராதிக்கப்பட்ட நல்ல மேய்ப்பராம் ஆண்டவருக்கு, திருச்சபை பாஸ்கு காலத்தில் மிகுந்த ஆடம்பரத்துடன் திருநாள் கொண்டாடுகிறது. இத்திருநாளின் போது பொதுவாக தேவ அழைத்தலைப் பற்றியும், குறிப்பாக குருத்துவ அழைத்தலைப் பற்றியும் போதிப்பது வழக்கம்.

நமதாண்டவர் மெய்யாகவே நல்லாயனாகையால், அவர் தாம் இவ்வுலகை விட்டு பரலோகத்திற்கு எழுந்தருளினப் பின்பு தமது ஆடுகள் "என்றென்றைக்கும் சேதமாய்ப் போகாதபடி"க்கும், "அவைகளை ஒருவனும் பறித்துக் கொள்ளாத"படிக்கும் (அரு.11:28) தான் செய்து வந்த மேய்ப்பு பணியைத் தொடர்ந்து செய்யும்படி தன்னுடைய அப்போஸ்தலர்களுக்கும் அவர்கள் வழிவருபவர்களான மேற்றிராணிமார்கள், அவர்களுக்கு கீழ் இருக்கும் குருக்களுக்கும் அதிகாரத்தைக் கொடுத்தார். நமதாண்டவர் அப்போஸ்தலர்களைத் தெரிவு செய்தது போல, மேய்ப்புப் பணிக்காகத் தான் விரும்புகிறவர்களைத் தேர்ந்தெடுத்து வருகிறார். ஆம்! துறவற, குருத்துவ அழைத்தலைப் பொறுத்த வரை, யார் யாரை சர்வேசுரன் அந்த "உத்தமத்தனத்திற்கு அழைக்கிறாரோ..." (மத்.19:21) அவர்கள்தான் அதை அடைய முடியும். இவ்வளவு காலமாக, கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளாக இத் தேவஅழைத்தல்களால் செழித்து வந்த கத்தோலிக்கத் திருச்சபையில் இன்று தேவஅழைத்தல்கள் குறைந்து வருகிறதே! திடீரென சர்வேசுரன் தாம் விடுக்கும் அழைப்பை நிறுத்திவிட்டாரா? அல்லவே! பின் ஏன்தான் இன்று தேவஅழைத்தல்கள் குறைந்து வருகின்றன? குறிப்பாக மேலை நாடுகளில் குருமடங்களும், துறவியர் கன்னியர்மடங்களும் காலியாகி வருகிறதே. ஏராளமான குருமடங்களும், துறவற மடங்களும் விற்பனைச் செய்யப்படுகின்றனவே! நமது நாட்டில் ஆயர்களுக்கெதிராக குருக்கள் போராட்டம்! ஏன் இந்த அவல நிலை?

**"அன்றியும் ஆரோனைப் போல் சர்வேசுரனாலே அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த மகிமைக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை..."** (எபிரே. 5:4)

இதற்கு பல காரணங்களை நாம் ஆதாரத்துடன் தரக்கூடும். இங்கு நாம் ஞானக் காரணங்களை மட்டுமே சிந்தித்துப் பார்ப்போம்.

ஆண்டவர் அநேகரை அழைக்கிறார். இருப்பினும் பெரும்பாலானவர்கள் அவ்வழைத்தலை ஏற்றுக் கொள்வதில்லை. ஏற்றுக் கொண்டாலும் அதிலே நிலைத்திருப்பதில்லை. இப்படிப் பட்ட நிலைக்கு ஒரு ஆன்மா எதனால் தள்ளப்படுகிறது என்பதை ஆராய்வோம். இன்று பாரம்பரிய கத்தோலிக்கர்களிடையே கூட தேவ அழைத்தல் பற்றிய போதிய விழிப்புணர்வு, ஆர்வம் இல்லை. தேவஅழைத்தலுக்காக ஜெபித்தாலும் கூட தேவஅழைத்தல்கள் குறைகின்றனவே?

## அதற்கு என்ன காரணம்?

### 1. போதிய மன உறுதி இல்லை:

மிக உந்நதமான காரியத்திற்காக தன்னையே அர்ப்பணித்து விடுவதற்குத் தேவையான மன உறுதி, திடமான தீர்மானம், ஒப்புக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை குறைவுபடுதலே தேவஅழைத்தல் குறைவதற்கு காரணங்களாகும். கத்தோலிக்கரின் அடிமனதில் பெருந்தன்மை குறைந்ததின் காரண மாக, ஆண்டவரின் அழைப்பிற்கு முழு மனதோடு செவிசாய்க்காத நிலை ஏற்படுகிறது.

ஆன்மாவின் நிலையற்ற தன்மைக்குக் காரணம், நாம் வாழும் இந்த உலக ஆதாய தான்தோன்றி மனப்பான்மை மேலோங் கியிருக்கும் இவ்வுலகின் சூழ்நிலையே ஆகும். ஆம்! தாம் விரும்பும் எதையும் செய்யும் 'உரிமை' என்ற தவறான தான் தோன்றித்தனம் தெரிந்தோ தெரியாமலோ இன்று கத்தோலிக்க ஆன்மாக்களையும் கறைபடுத்தியுள்ளது.

எதையும் செய்யலாம் என்ற மேற்கூறிய தவறான மனப்பான்மை கடவுளின் நித்திய சட்டத்தில் ஊன்றியுள்ள விதிகளையும், அவசியமான அதிகாரத்தையும் அலட்சியப்படுத்தி குறைத்து மதிப்பிடும் நிலைக்கு கொண்டு வருவதால், அது பாவத்துக்கேதுவாகிறது. துறவற மற்றும் குருத்துவ 'கீழ்ப்படிதல்', துறவற மடத்தின் 'ஒழுங்குகளுக்குத் தன்னையே உட்படுத்திக் கொள்ளுதல்' என்ற விலையேறப்பெற்ற **முத்து** இப்போது சரிவர புரிந்து கொள்ளப்படவில்லை. பிறருக்கு தன்னையே கீழ்ப்படுத்தி, பணிவதில் தயக்கமும், வெறுப்பும் கொள்வதால் இன்று பொறுப்பு களை ஏற்பதிலும், ஒரு காரியத்தைச் செய்வதில் தன்னையே ஈடுபடுத்திக் கொள்வதிலும் மிகுந்த தயக்கம் காட்டும் மனநிலை இளைஞர்களிடம் காணப்படுகிறது. இந்த மனப்பான்மை பாரம்பரிய கத்தோலிக்க இளைஞர்களையும் பீடித்து சர்வேசுரனை ஆராதிப் பதில் அசமந்தமும், அவருடைய அழைத்தலுக்கு செவிசாய்ப்பதில் அலட்சியமும் கொண்டவர்களாக்குகிறது.

### 2. ஜென்மப் பாவத்தின் காயங்கள்:

தேவ அழைத்தல் குறைவிற்கு மற்றுமொரு காரணமாக ஆதாமின் வீழ்ச்சியால் மனுக்குலத்தைக் கறைபடுத்திய ஜென்மப்பாவத்தால் ஆன்மாவில் ஏற்பட்ட காயங்களைக் கூறலாம். ஒரு ஆன்மா இயல்பாகவே புண்ணியங்களைச் செய்ய வேண்டும் எனற சார்பைக் கொண்டிருக்கும். ஆனால் ஜென்மப்பாவம் அதனைக் காயப்படுத்தி அச்சார்பை மழுங்கச் செய்து நாளடைவில் இல்லாமல் செய்து விடுகிறது. ஜென்மப்பாவம் ஆன்மாவில் ஏற்படுத் தும் காயங்களாக **(1) புத்தி**க்குருட்டாட்டம் - அதாவது உண்மையைக் கண்டு ஏற்றுக்கொள்ளாத நிலை. **(2) சித்த**த்தில் கபடு, சுயநலம், ஆசாபாசம். **(3)** கடினமான காரியங்களை செய்ய இயலாத ஆத்துமப் பலவீனம், நோவு. **(4)** புலனடக்கம் இல்லாமை (துர்இச்சை) ஆகியவற்றைக் கூறலாம். இவை இன்று உலக மாந்தர் அனைவரையும் மட்டுமல்லாமல், நமது கத்தோலிக் கக் குடும்பங்களையும்கூட பாதிக்கின்றன. இதனை அறியாமலும் அல்லது அறிந்தும் பொருட்படுத்தாத நிலையே தொடர்கிறது. கத்தோலிக்க ஞானோபதேச, நல்லொழுக்கப் போதனைகள், சர்வேசுரனின் வரப்பிரசாத உதவி, ஒறுத்தல் (தவ முயற்சிகள்) ஆகியவைகளை தகுந்த முறையில் பயன்படுத்துவதின் மூலமே பலவீனமான சுபாவத்தைக் குணப்படுத்த முடியும். ஆனால் இன்று கத்தோலிக்கக் குடும்பங்கள் இவைகளை முழுமையாக பயன்படுத்துகின்றனவா என்றால், இல்லை என்றுதான் சொல்ல முடியும்.

இவைகளே இன்று திருச்சபையில் தேவஅழைத்தல்கள் வீழ்ச்சியடைவதற்கான காரணங்களாகும். இவைகளால் பாரம் பரியக் கத்தோலிக்கம் கூட மிகவும் பாதிக்கப்படுகிறது. சுருங்கச் சொன்னால், கத்தோலிக்கர்கள் இந்த ஜென்மப்பாவத்தின் காயங் களைப் பற்றிய அறியாமையால் அதற்கு சரியான தீர்வைக் காணாமல் உலகபோக்கிலேயே வாழ்வதால் சர்வேசுரனின் அழைப்பிற்கு செவிகொடாமல் இருக்கின்றனர்.

## தேவஅழைத்தல்களை அதிகரிப்பது எப்படி?

திருச்சபையின் எதிர்காலம் தேவஅழைத்தல்களையே சார்ந்திருக்கிறபடியால் இதனை அதிகரிக்க நாம் என்ன செய்யலாம்?

**1.** நல்ல கத்தோலிக்கப் போதனைகளுக்கு ஏற்ற உத்தம கிறீஸ்தவ ஜீவியம் ஜீவித்தல்.

**2.** தங்கள் வாழ்வில் சத்தியத்திற்கும், ஒழுக்க நியதிகளுக்கும் முரன்பாடான முற்போக்கு நவீன கொள்கைகள் (Liberalism) நுழையாதவாறு கவனமாக வாழ்தல்.

**3.** நமது வாழ்வில் சர்வேசுரனுடைய கற்பனைகளுக்கும் நியாயமான மேலதிகாரிகளின் அதிகாரத்திற்கும் நேர்மையான கீழ்ப்படிதலை அனுசரிப்பது.

**4.** உலகத்தன்மையையும் அதனுடைய தவறான தான்தோன்றி மனப்பான்மை, எதிலும் வெற்றி பெற வேண்டுமென்ற இறுமாப்பு, உலக இன்பங்கள், உலக பொருட்களின் மீது பற்று ஆகியவற்றை கட்டுப்படுத்தி வாழும் மனப்பாங்கை கொண்டிருத்தல்.

இப்படி வாழ்வதால்தான் கிறீஸ்துவின் சிலுவையின் இரகசியத்தை புரிந்துகொண்டவர்களாவோம். இதனால் கிறீஸ்தவ குடும்பங்களில் குருத்துவ, துறவற தேவஅழைத்தல்கள் பெருகும். திருச்சபை வளம் பெறும். எனவே விசுவாசிகள் தேவஅழைத்தல் கள் பெருகும்படியும், அழைத்தலைப் பெற்றவர்கள் அதில் நிலைத் திருக்கும்படியாக ஜெபிக்க வேண்டும். விசேஷமாக இந்த நல்லாயன் ஞாயிறன்று இந்தக் கருத்துக்களுக்காக மன்றாடுவோ மாக.

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**

# அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையின்
# பொது அதிபரவர்கள் நண்பர்களுக்கும், உபகாரிகளுக்கும்
# எழுதிய மடல் எண். 70.

அன்பார்ந்த நண்பர்களே, உபகாரிகளே,

நீண்டகாலமாக நமது சபையைப் பற்றிய இக்கடிதத்தை உங்களுக்கு அனுப்ப ஆவலாக இருந்தோம். இதனை அனுப்புவதை தள்ளி வைத்திருந்தோம். ஏனென்றால் சில மாதங்களுக்கு முன்பாகவே வெளியீடுவதாக அறிவிக்கப்பட்ட , திரிதெந்தீன் பூசையை நிறைவேற்றுவதற்கான உத்தரவுப் பற்றிய "Motu Proprio" என்ற அறிக்கையைப் பற்றிய நமது நிலையை விளக்கிச் சொல்ல வேண்டும் என்று நாம் விரும்பியதே ஆகும். கடந்த அக்டோபர் மாதத்தில் திவ்விய பலிபூசையை விடுவிக்க வேண்டும் என்பதற்காக நாம் ஞானப்பூச்செண்டு தயாரித்து சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தோம். அதனால், இந்த விண்ணப்பத்தைப் பற்றி பாப்பரசர் 16–ம் ஆசீர்வாதப்பரின் "Motu Proprio" என்ற அறிக்கையின் வெளியீடு உடனடியாக இருக்குமென்று தோன்றியது. ஆனால் சில ஆயர்களின் கடுமையான எதிர்ப்பினால் பாப்பரசர் அதனை ''சிறிது காலத்துக்கு'' தாமதித்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த "சிறிது காலம்" நீண்டகாலமாக மாறிவருகிறபடியால், நிலவும் தற்போதையச் சூழ்நிலையைப் பற்றிய நமது நிலையை உங்களோடு பறிமாறிக் கொள்வதை இனிமேலும் தாமதிக்க முடியாது.

முதலில், உங்களது தாராளமான ஜெபத்திற்கு எனது அன்பான நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நமது சபையின் பொதுக்குழு (Chapter) அக்டோபர் இறுதிக்குள் **10 லட்சம்** ஜெபமாலைகளை ஜெபித்து ஒப்புக்கொடுப்பது என்ற ஒரு இலக்கை நிர்ணயித்தது. அறுவடை உண்மையிலேயே மிகுதியாக இருந்தது. **25 லட்சம்** ஜெபமாலைகளை கொண்ட ஞானப்பூச்செண்டை பாப்பரசருக்கு நம்மால் அனுப்ப முடிந்தது. ஞானப்பூச்செண்டோடு பாப்பரசருக்கு நாம் சமர்ப்பித்தக் கடிதத்தில், நமது இந்தத் திடமான செயல் மூலம் திருச்சபையையும், கிறீஸ்தவத்தையும் மீண்டும் கட்டியெழுப்புவதில் நமது ஒத்துழைப்பிற்கான மனதையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்த விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தோம்.

2–ம் வத்திக்கான் சங்கத்திலிருந்து திருச்சபையை பீடித்து வரும் கொடிய சிக்கல்கள், கிறீஸ்துவின் பிரதிநிதியான பாப்பரசர் துவங்கி, திருச்சபையின் அதிகார படிநிலையினரின் மிகப் பெரிய தீர்மானமும், முயற்சிகளுமின்றி முடிவுக்கு வராது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. இத்தகையச் சூழ்நிலையில், அது தவறான போக்கினால் ஏற்பட்ட அசமந்தத்தை மேற்கொள்வது; கிறீஸ்துவின் ஞான சரீரத்தோடு ஒன்றுசேர்க்கப்பட்டுள்ள, கிறீஸ்துவின் மணவாட்டியான திருச்சபையின் சத்தியங்களுக்கு எதிரான தப்பறைகளையும், தவறுகளையும் ஆணித்தரமாக மறுப்பதையும் குறிப்பதாகவும் இருக்கும். பரலோகத்தின் வல்லமையுள்ள உதவியில்லாமல் எந்த ஒரு மகிழ்ச்சியான முடிவையும் எதிர்பார்க்க முடியாது. அதனால்தான் திருச்சபையின் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்ள, நாம் நமதாண்டவரிடமும், நமது தேவ அன்னையிடமும் திரும்பினோம், இன்னும் மன்றாடுகிறோம். இதுவரைக்கும் நாம் எதிர் பார்த்த முடிவு வராவிட்டாலும்கூட, கடந்த பத்து ஆண்டுகளாக காணமுடியாமலிருந்த, திரிதெந்தீன் பாரம்பரிய



பூசையைப் பற்றிய காட்சிகளை அக்டோபர் மாதத்தில் நாம் காண முடிந்தது. லத்தீன் வழிபாட்டின் மீது கொண்ட பற்றுதல், பத்தாம்பசலித்தனம், பழமை விரும்பிகளின் உணர்வு என்று மறுத்துக் கூறப்படும் வழக்கமான கோஷங்கள் மாறி, இப்போது, பாரம்பரிய பூசையை நிறைவேற்ற குருக்களுக்கு சுதந்திரம் வழங்குவது, கோட்பாட்டுப் பிரச்சினைகளை உருவாக்கிவிடும் என்று கூறும் கடுமையான வாதங்கள் எழுந்துள்ளன. அவர்கள் நம்மிடம், இந்தப் பூசை 2–ம் வத். சங்கத்தின் சாதனைகளுக்கு ஆபத்தாகி விடும் என்று கூறுகிறார்கள். இந்தத் திடீர் கண்டுப்பிடிப்பைக் கண்டு எப்படி நம்மால் மகிழாமல் இருக்க முடியும்?

இந்த நாட்களில் தோன்றியிருக்கும் வாதங்களை நாம் சற்றுக் கவனித்தால், குறிப்பாக பிரான்ஸ் நாட்டு மேற்றிராணிமார்கள், அதோடு ரோமையிலும், ஜெர்மனியிலும் கூட ஆயர்கள் இந்த பாரம்பரிய பூசைக்கு அஞ்சுகிறார்கள் என்ற உண்மையைக் காணலாம். ரோமாபுரியும்கூட பாரம்பரியப் பூசையை மீண்டும் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்களை வரையறுத்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், 6–ம் சின்னப்பர் கொண்டு வந்த மாற்றங்களை (புது பூசை மற்றும் திருவழிபாட்டில் நவீன மாற்றங்கள் – ஆசிரியர்) குறை கூறாமல், மிகுந்த கவனமாக இருக்கிறது. ஆக, நவீனவாதிகளின் பயம் எந்த அளவுக்கு இருக்கிறதென்றால், பாரம்பரிய பூசையை நிறைவேற்ற குருக்களுக்கு அனுமதி வழங்குவதில் (ரோமாபுரிக்கு) நீண்ட காலத்துக்கு, வழுவந்தமான வாதங்களை எதிர்நோக்க வேண்டிய அவசியம் உள்ளது. உண்மையிலேயே, இத்தகைய சூழ்நிலை மேம்பட்டதாக உள்ளது எனலாம். நாம் நமது கடிதத்திற்கு எந்த ஒரு நன்றியோ அல்லது ஒரு பதிலோ பரி. பாப்பரசரிடமிருந்தோ அல்லது வத்திக்கானிலிருந்தோ இதுவரையிலும் பெறவில்லை என்பதே இதற்குச் சான்று.

இத்தகைய தற்போதையச் சூழ்நிலையில், பெரிதும் பேசப்படும் "Motu Proprio" அறிக்கையில் துல்லியமான வார்த்தைகளையும், அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் நம்மால் அறிய முடியாவிட்டாலும் கூட நாம் நமது எதிர்காலத்திற்கான சில முடிவுகளை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. அவை–

**1.** கடந்த 10 ஆண்டளவாக ரோமையிலிருந்து வரும் போதனைகள் மற்றும் ஒழுங்குகள் சம்பந்தமான ஆவணங்கள் உலக ஆயர்களாலும், விசுவாசிகளாலும் எவ்வாறு ஏற்கப்பட்டன என்று பார்த்தால், இதில் பெரிய அலட்சியமே நிலவுகிறது என்றும், இந்த அலட்சியப்போக்கே ரோமையால் பரிந்துரைக்கப்பட்ட, அனுசரிக்கக் கேட்டுக்கொண்ட காரியங்கள் அனைத்துமே பயனின்றி வீணாய் போனதற்கு காரணம் என்று கூறலாம். தேவ வழிபாட்டில்

**"மோட்சத்திற்கு இப்பக்கம் அழகில் சிறந்தது திரிதெந்தீன் பலிபூசையே"**

**— சங். ∴பேபர் சுவாமி**

விசுவாசிகளின் பங்குப் பற்றியதாகட்டும், "ஆண்டவர் சேசு"(Dominus Jesus) என்ற அறிக்கையாகட்டும் அல்லது கருச்சிதைவு மற்றும் கருணைக்கொலை (euthanasia) பற்றிய கண்டனமானாலும் சரி, இவை குறித்து ரோம் வெளியிட்ட ஆணை அல்லது அறிக்கைகள் எந்த ஒரு உண்மையான பலனும் தராது போயின என்பது அனைவரும் அறிந்த விஷயம் தான். இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, வரப்போகிற "Motu Proprio" மடலுக்கும் இதே போன்ற நிலைதான் வரும் என்று அதிர்ச்சியடைய வேண்டியதாயிருக்கிறது.

**2.** இந்த ஆவணம் கட்டுபாடுகளை விதிப்பதைவிட ஒரு சலுகையைத் தரவல்லதாக இருப்பினும், மேலும், பழைய பூசையில் ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு இது எழுதப்படுவதாக இருந்தாலும்கூட, இது குருக்கள் மற்றும் விசுவாசிகளின் எதிர்பார்ப்புகள்படி அமையுமானால், இது சில நாடுகளில் திருச்சபையின் அதிகாரிகளை அவர்களது அலட்சிய போக்கிலிருந்து விழித்தெழச் செய்துவிடவும், அவர்களின் எதிர்ப்புகளை சீண்டிவிடக்கூடியதாகவும் இருக்கும். இதைத்தான் சில மேற்றிராணிமார்களும் தங்கள் மேற்றிராசனத்தில் திருவழிபாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்று எச்சரிக்கிறார்கள். தற்போது, உண்மையிலேயே, புதுப்பூசையில் நடக்கும் பல்வேறு அநாச்சாரமான காரியங்களைக் கவனத்தில் கொண்டு பார்த்தால், பழைய பூசையை அனுமதிப்பதால் புதுவகையான பிரிவினைகள், குழப்பங்கள் ஏற்படும் என்ற பயம் எங்கிருந்து வரும் என்று ஆச்சரியப்பட வேண்டியதாயுள்ளது. மாறாக பாரம்பரிய வழிபாடு, குறிப்பாக அதனுடைய பரிசுத்த லத்தீன் மொழியின் காரணமாக, அது எப்போதும் ஒற்றுமையின் கருவியாக இருந்து வந்துள்ளது நிரூபிக்கப்பட்ட ஒன்று.

**3.** இந்த "Motu Proprio" அறிக்கை பெரிய தொகையினரான மக்களால் வரவேற்கப்படும் என்று நிச்சயம் கூற முடியாது. ஏனெனில் பழைய வழிபாட்டு முறையை விரும்பும் குருக்களும், விசுவாசிகளும் விகிதத்தில் மிகக் குறைவாகவே உள்ளனர். மற்றவர்கள் இதில் விருப்பமற்றவர்களாகவோ அல்லது ஆர்வமற்றவர்களாகவோ இருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளையும், பல நூற்றாண்டு காலமாய் கிறீஸ்தவர்களையும் அர்ச்சித்த இந்த வணக்கத்துக்குரிய, பரிசுத்த வழிபாட்டு ரீதியை அகில திருச்சபையில் அதனுடைய மிக உன்னதமான இடத்திற்குக் மீண்டும் கொண்டு வருவதற்கு மிகக் கடினமான முயற்சிகள் தேவையாக இருக்கும்.

**4.** பாரம்பரிய திருவழிபாட்டின் இழந்து போன அழகும் மாண்புகளும் மீண்டும் அறியப்படச் செய்யும் செயல்பாடு மிக மெதுவாகவே மேலே எழும். ஆனால் அது மெல்ல உறுதியடைந்து நிலைகொள்ளும். திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை செய்விப்பதற்குக் கொடுக்கப்படும் உரிமையானது (இந்த பூசை ஒருபோதும் தடை செய்யப்படவில்லை!) அங்கீகரிக்கப்படும் போது, தானாகவே மெல்ல தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும். எனெனில் புதுப்பூசையால் அதனை மேற்கொள்ள முடியாது.

**5.** எவ்வகையிலும், சுலபமாக எந்த தடையுமின்றி பாரம்பரிய பூசையை நிறைவேற்ற வழங்கப்படும் உத்தரவு திருச்சபைக்கு பெரிய ஆசீர்வாதமாகத்தான் இருக்கும். வெளிவரவிருக்கும் இந்த ஆவணம் நிச்சயமாக "நமக்குள்ளே" ஒருசில குழப்பங்களை ஏற்படுத்தக் கூடும். இது எந்த அர்த்தத்தில் என்றால், பாரம்பரியத்திற்கும் அதிகாரப்பூர்வமான திருச்சபைக்கும் நல்லிணக்கம் ஏற்பட்டுவிட்டதாக ஒரு எண்ணத்தை உண்டுபண்ணிவிடக் கூடும். இந்த மடல் வெளிவரும் போது ஒற்றுமைக்கான ஒரு கோரிக்கை உரோமையிலிருந்து வரக்கூடும்.

அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக்கு, பாரம்பரியப் பூசை செய்விப்பதற்கு அளிக்கப்படும் தாராள அனுமதி சந்தோஷத்தை தரக் கூடியதாகத்தான் இருக்கும். பாரம்பரியத்தை மீண்டும் கொண்டு வரச் செய்யப்படும் முயற்சியில் மேலும் ஒரு படி முன்னேறியதாகத்தான் அது இருக்கும். ஆனால் இவ்வளவு ஆண்டுகளாய், "நமக்கு நல்ல மேய்ப்பர்களாக இருக்க வேண்டியவர்களுக்கு" எதிராக செய்த போராட்டம், தற்காப்பு எதிர்ப்பு ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட நம்பிக்கையின்மையை, புரிந்துகொள்ளாத நிலையை அவ்வளவு சுலபமாகப் போக்கிவிட முடியாது. புதுப்பூசைதான் திருச்சபையில், 40 ஆண்டுகளாய் நிலவும் குழப்பங்களுக்கு காரணமென்று கொள்வதைவிட, புதுப்பூசையின் விளைவுகள் தான் அவை என்று சொல்ல வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், பழையப் பூசை திரும்பக் கொடுக்கப்பட்டாலும், அதனோடுகூட மிக அவசியமான பல திருத்தங்கள் வராவிட்டால், நம்முடைய நிலையில், நடைமுறையில் எந்த மாறுதலும் இராது.

**6.** எக்குமெனிசம், முற்போக்கு வாதம் மற்றும் கிறீஸ்துவின் பத்தினியைக் களங்கப்படுத்தும் உலக மனப்பான்மை ஆகியவை இன்னமும் கூட சங்கச்சபைக்கு உயிர் கொடுக்கும் கொள்கைகளாகவே உள்ளன. இப்படிப்பட்ட கொள்கைகள் சர்வேசுரனின் இஸ்பிரீத்துவை, கிறீஸ்தவ உணர்வுகளைக் கொன்று விடுகின்றன. திருச்சபையில் உள்ள குழப்பத்தின் வேர்களை, காரணங்களை முன் எப்போதையும் விட இன்னும் தெளிவாக ஆழமாகப் புரிந்து கொண்டு Motu Proprio–வினால் உருவாகும் புதிய சூழ்நிலையில் கண்மூடித்தனமாக ஆர்வம் கொள்ளாமல் கவனமாய் இருக்க வேண்டும். நமது திருச்சபையின் ஒழுங்கு முறையைப் பற்றி சிந்திக்கும் முன், மேற் சொன்ன சங்கச்சபையின் தவறான கொள்கைகளைப் பற்றிய கேள்விகளை ஆழமாய் ஆராய்வது இன்றியமையாத ஒரு தேவையாய் இருக்கிறது.

கடைசியாக உரோமை எந்த ஒரு பேச்சு வார்த்தைக்கும் முன் நம்முடைய முன் நிபந்தனைகளைப் புரிந்து கொள்ளும் என்று நம்புகிறோம். இரு நிபந்தனைகளில் ஒன்று "Motu Proprio"வின் மூலம் நிறைவேற்றப்படலாம். கடந்த 30 ஆண்டுகளாய் விஷத்தைக் குடிக்க மறுத்து வந்தோம். இதன் காரணமாகத்தான் நாம் மறுக்கப்பட்டிருக்கிறோம், ஒதுக்கப்பட்டிருக்கிறோம். இன்னமும் கூட, "அந்த விஷத்தை (ஏறக்குறைய மறைவாக) அருந்துவது" என்பதைத் தான் உரோம் நம்மை அங்கீகரிப்பதற்கு ஒரு நிபந்தனையாகத் திணிக்கிறது. எக்குமெனிசம், சமய சுதந்திரம், மற்றும் கூட்டுத் தீர்மானம் (collegiality) ஆகியவை நமது எதிர்ப்பின் முக்கிய காரணமாக உள்ளன. இதில் நாம் சிறிதளவும் மாற மாட்டோம்.

**7.** இதுவரைக்கும் கூறியவை ஒரு யூகம் தான். "Motu Proprio" வின் சரியான தகவல்கள் தெரியவந்த பின்பு அது பற்றிய ஒரு சில விளக்கங்கள், கருத்துக்கள் தேவைப்படலாம் . . .

**தவக்காலத்தின் முதல் ஞாயிறு**
**25 பெப்ருவரி, 2007.**
**+ பெர்னார்டு ஃபெல்லே**

## ஆண்டுச் சந்தா அறிவிப்பு!

**நேயர்களின் விருப்பத்திற்கேற்ப நமது** Salve Regina **பத்திரிகைக்கு ஆண்டு சந்தா ரூ.60/– என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசுப் பதிவு செய்யப்படாததால் தபால் செலவு பிரதிக்கு ரூ.4/– ஆகிறது. ஆகவே அரசு பதிவு கிடைப்பதற்காகவும் நமது பத்திரிகை ஆன்ம பலன் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.** – ஆசிரியர்



# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை

## அறிந்து கொள்வோம்!

[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]



### பூசை ஆரம்பம் (தொடர்ச்சி)

**– பீடத்தினடியில் ஆயத்த செபங்கள் –**

(Prayers at the foot of the Altar)

– வெளியரங்க பாவசங்கீர்த்தனம் –

**(Confiteor)**

பீடத்தினடியில் ஜெபிக்கப்படும் ஜெபங்களில் முதன்மையானதும், மையமுமானது **"Confiteor"** என்ற பாவசங்கீர்த்தன ஜெபமாகும். இது பாவப் பொறுத்தலோடு நிறைவடையும்.

அதற்கு முன்பாக குருவானவர், "**Adjutorium nostrum... ஆண்டவருடைய நாமத்தில் தான் நமக்கு உதவி இருக்கிறது**" என்று ஜெபித்து தம்மீது சிலுவை அடையாளம் வரைந்து கொள்வார். பீட பரிசாரகர்களும் தங்கள் மீது சிலுவை வரைந்து கொண்டே "**Qui fecit caelum... அவரே பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தவர்**" என்று பதிலளித்து ஜெபிப்பார்கள். இது எதற்கெனில், குருவானவர் திவ்விய பலி நிறைவேற்ற தமது தகுதியற்ற நிலையை உணர்ந்த முந்தைய நிலையிலிருந்து, புதிய நம்பிக்கை கொண்டவராக ஆண்டவரின் நன்மைத்தனத்தில் திடம் கொண்டு, தமது முழு நம்பிக்கையையும் சர்வேசுரனின் வல்லமையிலும், அன்பிலும் வைக்கிறார். ஏனெனில் **அ**வரே தம்மை சிருஷ்டித்து, தமக்காக சிலுவையில் மரித்து, எல்லா வரப்பிரசாதங்களையும் சம்பாதித்தவர் என்பதை உணர்ந்தவராக, கிறீஸ்துவின் இரக்கத்திலும் அவரது பேறுபலன்களிலும் திடமான நம்பிக்கைக் கொள்கிறார்.

தமது தகுதியின்மையை உணர்ந்த குரு தாழ்ச்சியோடு தமது குறைவை, தகுதியின்மையைப் பொறுத்து பாவங்களை மன்னித்து அவைகளுக்கான தண்டனையை சர்வேசுரன் ஒருவரே போக்க முடியும் என்பதை உணர்ந்து "ஏனெனில் அவரிடமே இரக்கமும், இரட்சண்யமும் உள்ளன" (சங். 129:7) என்ற நம்பிக்கை கொண்டவராக தமது இரட்சண்யம் கிறீஸ்துவின் சிலுவையிலிருந்து வந்தது என்பதை உணர்த்தும்படியாக தம்மீது சிலுவை அடையாளம் வரைந்து கொள்கிறார். பீட பரிசாரகர்களும், விசுவாசிகளும் தங்கள் மீது சிலுவை அடையாளத்தை வரைந்து கொள்வார்கள்.

பீடத்தினடியில் குருவானவர் தன்மீதே குற்றஞ்சாட்டிக்கொண்டு தாழ்த்துகிறார். தமது அனைத்து பாவங்களுக்காகவும் மன்னிப்பு கேட்கிறார். "கரங்களில் மாசற்றவனும், இருதயத்தில் பரிசுத்தமுள்ளவனுமாயிருப்பவன் தான்..." பீடத்தை அண்டிச் சென்று, "ஆண்டவருடைய பர்வதத்தின் பேரில் ஏறிச் செல்லவும்", "அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்..." (சங். 23:30) நிற்கவும் முடியும். இங்கே நிற்கத் தகுதியாகும் குருவானவர் " பரிசுத்தரும், மாசில்லாதவரும் அமலரும் பாவிகளினின்று பிரிக்கப்பட்டவரும், பரமண்டலங்களுக்கு மேலாக உயர்த்தப்பட்டவருமாகிய இவ்வித பிரதான குரு" (எபிரே. 7:26) வாக இருக்க வேண்டும். ஆனாலும் பீடத்தினடியில் குரு உந்நத பலியை நிறைவேற்றும் தகுதிக்காகத் தன்னையே தாழ்த்துகிறார். தமது தகுதியின்மையையே மீண்டும் உணருகிறார். சிறு, சிறு குற்றங் குறைகள் இப்பொழுது பெரிய குறைகளாக, தீமைகளாக அவரது கண்களுக்கு தெரிகின்றன. "பொறுக்கப்பட்ட பாவத்தைப் பற்றி அச்சமற்றிராதே" (சர்வபிர. 5:5) என்பதற்கேற்ப அவரது பழைய மன்னிக்கப்பட்ட பாவங்கள் கூட அவரை பயமுறுத்துகின்றன.

எனவே பலி நிறைவேற்ற போகும் முன்பாக குருவானவர் தனது பாவங்களைப் பகிரங்கமாக அறிக்கையிடுகிறார். மிகுந்த வருத்தத்தோடு சகல மோட்சவாசிகளிடமும், பூலோகவாசிகளிடமும் தமக்காக மன்றாடும்படி இரு கரங்களை நெஞ்சில் குவித்து தாழ்ச்சியோடு குனிந்து, மோட்சத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் துணியாமல், "**... confiteor Deo omnipotenti... சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரனுடனேயும்...... எனக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்று மன்றாடுகிறேன்**" என்று ஜெபிக்கிறார். உள்ளம் நொறுங்குண்டவராக குரு ஜெபத்தின் நடுவில் தமது பாவங்களுக்காக மூன்று முறை மார்பில் பிழை தட்டிக் கொள்கிறார். இப்படிச் செய்வது ஆழ்ந்த மனஸ்தாபத்தின் அடையாளமாக உள்ளது. அன்பான, துயரம் நிறைந்த இருதயத்தின் ஆழத்திலிருந்து வரும் வெளிப்பாடாக இச் செபம் திகழ்கிறது.

**பாவசங்கீர்த்தன ஜெபத்தின் அம்சங்கள்**


பாவசங்கீர்த்தன ஜெபத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அவை (1) தனது பாவங்களை ஏற்றுக்கொள்ளுதல், (2) முத்திபேறு பெற்றவரிடமும், விசுவாசிகளிடமும் நமது கடவுளாகிய ஆண்டவரிடம் பரிந்துரைத்து மன்றாடும்படி கேட்டு வேண்டுதல்.

இச்செபம் சர்வேசுரனின் சமூகத்தில் மட்டுமல்லாது, மோட்சவாசிகள், பூலோகவாசிகளான விசுவாசிகளின் முன்பாகச் சொல்லப்படுகிறது. அவர்களின் மன்றாட்டால் குருவானவர் தமது பாவங்களை சர்வேசுரன் பொறுத்து தம்மை பலி நிறைவேற்றத் தகுதியுள்ளவராக்கும்படியே இதனைக் குரு சொல்லி மன்றாடுகிறார்.

ஒவ்வொரு பூசையிலும் அர்ச்சிஷ்டவர்களின் பரிந்துரை கேட்கப்படுகிறது. அவர்களின் ஜெபங்களாலும் சர்வேசுரனுடைய வரப்பிரசாதம் மன்றாடப்படுகிறது. அர்ச்சிஷ்டவர்கள் நமது உபகாரிகளாகவும், பாதுகாவலர்களாகவும், பரிந்து பேசுபவர்களாகவும் இருப்பது ஒரு தெய்வீக நியமம் - அது சர்வேசுரனின் ஏற்பாடு. இதனைத் தான் திருச்சபை தமது விசுவாச பிரமாணத்தில் "அர்ச்சிஷ்டவர்களின் சமூதீதப் பிரயோஜனம்" என்ற விசுவாசப் பகுதியாக அறிக்கையிடுகிறது! இச்செபத்தில் தேவதாயின் உதவி அதிதூதரான மிக்கேல், முத். ஸ்நாபக அருளப்பர் மற்றும் அப்போஸ்தலர்களான முத். இராயப்பர், சின்னப்பர், அருளப்பர் மற்றும் சகல மோட்சவாசிகள் என்றும் கடைசியாக விசுவாசிகளின் மன்றாட்டையும் கேட்டு குரு ஜெபிக்கிறார்.

குருவின் தாழ்ச்சியான பாவசங்கீர்த்தன ஜெபத்திற்கு பீட பரிசாரகர்கள் "**Misereatur tui omnipotens Deus... சர்வத்துக்கும் வல்ல சர்வேசுரன் உம்மீது இரக்கங் கொண்டு, உம்முடைய பாவங்களை மன்னித்து, உம்மை நித்திய ஜீவியத்திற்கு அழைத்துச் செல்வாராக**" என்று பதிலளிக்கின்றனர். இதனால் திடமடைந்த குருவானவர் '**ஆமென்**' என்று சொல்லி மெல்ல தலையை உயர்த்தி, நிமிர்ந்து "பரிசுத்த பர்வதமா"கிய பீடத்தை நோக்குகிறார்.

(தொடரும்)




**கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கி-மான**

**கிரகோரியன் லத்தீன் பாடல்களின் ஒலித்தட்டு!**

**நமது இதயத்தை சர்வேசுரனை நோக்கி மேலே எழுப்ப வல்ல கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரிய திரிதெந்தீன் திவ்விய பலிபூசையில் பாடப்படும் லத்தீன் மொழி கிரகோரியன் பாடல்கள்** (Gregorian Chant) **அடங்கிய ஒலித்தட்டுகள்** (CD) **வெளிவந்து விட்டன!**

**இவை 8 பிரிவுகளாக** (Volumes) **17 ஒலித்தட்டுகள் கொண்டது.**
**இதன் விலை ரூ.530/– மட்டுமே (தபால் செலவு உட்பட)**

**கிடைக்குமிடம்: அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை, பாளையங்கோட்டை.**

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் உள்ள மாகாணத்தைச் சேர்ந்த அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் குருவானவர் ஒருவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான ***"The Ideal of the Catholic Family"*** என்ற சிறு நூலின் தமிழாக்கமாகும்.)

முதல் உரை: **கத்தோலிக்க இல்லம்** (தொடர்ச்சி)

## குடும்பங்களில் தேவஅழைத்தல்கள்

தந்தையர்களே, நீங்கள் உங்கள் வார ஓய்வுநாளை நல்ல புத்தகங்களை வாசிப்பதில் செலவிடாமல் நாள் முழுவதும் டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் பார்ப்பதில் கழித்தால், உங்கள் மகன்கள் நல்ல புத்தகங்களை வாசிக்கும் ஆர்வம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். தாய்மார்களே, உங்கள் பெண்மக்கள் நீங்கள் ஜனரஞ்சமான பெண்கள் வார, மாத பத்திரிகைகளை வாசிக்க ஆர்வம் கொண்டிருக்கக் காண்பார்களேயானால், உங்கள் மகள்கள் நல்ல கத்தோலிக்கக் கதைப் புத்தகங்களைப் படிக்க ஆர்வம் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். நாம் நமக்குரிய மதிப்போடு இருந்து கொள்வோமாக! சிறந்த நல்லொழுக்கச் சட்டத்தை அனுசரிக்கும் கத். குடும்பம், நமதாண்டவரும், மாதாவும் விரும்பாத எதையும் தமது இல்லத்தில் அனுமதிக்காது.

இவ்வுரையை நிறைவு செய்வதற்கு முன்பாக, நான் எளிமையின் அவசியம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இந்த நவீன உலகம் தம்மையே தவறான மதிப்பீடுகளில் கறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. எப்படியெனில், நாம் நமது வீடுகளில் நமது வாழ்வை வசதியாக்கும், மகிழ்ச்சிக்குள்ளாக்கும் இயந்திரங்களையும், சாதனங்களையும் வாங்கி நிரப்புகிறோம். இது மட்டுமே, மனிதனின் உண்மையான இலக்கு - நோக்கம் அல்ல. மைக்ரோவேவன் அடுப்பையும், கம்ப்யூட்டர்களையும் ஆராதிப்பதற்காக நம்மை நமதாண்டவர் படைக்கவுமில்லை, தமது விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தால் இரட்சிக்கவுமில்லை. இத்தகைய நவீன சாதனங்களை பயன்படுத்தலாம். ஆனால், அது அளவோடு இருக்க வேண்டும். அவற்றிற்கு அடிமையாகாமல், அவற்றின் மீது அளவுக்கு அதிகமாக பற்றுக் கொண்டவர்களாக இருக்கக் கூடாது. அர்ச். சின்னப்பர் கூறுவது போல, "உலகப் பொருட்களை பயன்படுத்தாதவர்களைப் போல, அவற்றைப் பயன்படுத்த" வேண்டும். சிறிய எளிய பொருட்களை விரும்புவோமாக. வறுமை உணர்வை எப்போதும் மனதில் கொள்வோமாக. ஒரு சில குடும்பங்கள் தேவ அழைத்தலைப் பெற்றுக்கொள்வதைக் காணும் போது: இந்த இல்லத்தின் இயல்பு என்ன? என்று அடிக்கடி எனக்குள்ளே கேட்டுக் கொள்வேன். அங்கே தயாளமான தியாக உணர்வு, எண்ணம் முக்கிய இயல்பாக இருப்பதைக் கண்டு பிடித்தேன். அங்கே, பிள்ளைகள் தங்கள் அயலாருக்கு உதவி செய்ய, தங்கள் தேவைகளை மறக்கக் கற்றுக் கொடுக்கப்படு கிறார்கள். (உதாரணமாக: அவ்வப்போது நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல தருவதிலும், ஏழைகளுக்கு உதவுவதிலும் பிள்ளைகள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்). வாழ்வின் மகிழ்ச்சி சர்வேசுரனை மகிழ்விப்பதிலும், அவருக்காகக் காரியங்களை ஆற்றுவதிலும் அடங்கியுள்ளது என்பதைப் பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையில் எண்பிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களின் குழந்தைகள் தான் பெரியவர்களாக வளரும் போது, "துறவற அழைத்தல்" பற்றிய எண்ணமும், ஆவலும் கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். அந்த அழைப்பை ஏற்றுச் செயல்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. தேவ அழைத்தலின் சாராம்சமே தன்னையே கடவுளுக்குக் காணிக்கையாக வழங்குவது தான். உலகத்தன்மை வசதிகளை அனுபவிக்கும் எண்ணம் ஆகியவைகளுக்குப் பதிலாக, தயாளம், தியாகம் ஆகியவைகள் கற்றுக் கொடுக்கப்படும் இல்லத்தில் தேவ அழைத்தல்கள் மிக எளிதாக வளரும்.

அன்பான பெற்றோர்களே! மனம் தளர்ந்து போகாதீர்கள். ஆம், ஒரு உத்தம கத். இல்லத்தை ஏற்படுத்துவது என்பது கடினமானக் காரியமே. ஆனால், அது மிகுந்த மகிழ்ச்சியும், ஆறுதலையும் கொண்ட ஒரு அழகான அருமையான அழைத்தல். பாத்திமா காட்சி பெற்ற சகோதரி லூசியா: " மரியாயின் மாசற்ற இருதயம், குறிப்பாக மிகுந்த கடினமான துன்ப வேளைகளில் எனது அடைக்கலமாக இருக்கிறது. ஆகையால் நான் எப்பொழுதுமே பாதுகாப்பாக இருக்கிறேன். மரியாயின் மாசற்ற இருதயம், தமது ஒவ்வொரு பிள்ளைகளையும் எப்போதும் கவனித்துப் பாதுகாக்கின்ற மிகச் சிறந்த அன்னையின் இருதயமாக இருக்கிறது. இந்த எண்ணம் உண்மையாகவே என்னை எவ்வளவு உற்சாகப்படுத்துகிறது, திடமளிக்கிறது தெரியுமா? மரியாயின் மாசற்ற இருதயத்திடம் நான் திடத்தையும், ஆறுதலையும் கண்டடைகிறேன். இந்த மாசற்ற இருதயமே, சர்வேசுரனின் அளவற்ற வரப்பிரசாதங்களை எனது ஆன்மாவில் பொழியும் வாய்க்காலாக இருக்கிறது" என்று கூறியுள்ளாள்.

எனவே, நாம் நமது குடும்பங்களை இந்த அன்புள்ள நமது மோட்ச அன்னையின் அன்பான மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிப்போமாக. நமதன்னை அவர்களது தெய்வீக குமாரன் சேசு நமது இல்லங்களில அறியப்படவும், நேசிக்கப்படவும், ஊழியம் செய்யப்படவும் வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களே நம்மைக் கவனித்துக் கொள்வார்கள். நமது நித்திய மோட்ச வீட்டிற்கு வழிநடத்திச் செல்வார்கள். ஆமென்.

(தொடரும்)

*" ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிமரியம்மாள் நமது மகிழ்ச்சியின் காரணமாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களே சந்தோஷத்தின் ஊற்றை நமக்குத் திறந்தார்கள்"* - அர்ச். அந்தோணியார்

# செய்திகள்

## அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை பிரிவினை சபையல்ல – கர்தினால் பேட்டி

திருச்சபையின் புகழ்பெற்ற மிக.வந். காஸ்டிரியன் ஹோயோஸ் கர்தினால் ஆண்டகை அவர்கள் கடந்த மாதம் 17-ஆம் தேதியன்று வழங்கிய பொதுப் பேட்டியில் அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை ஒரு பிரிவினை சபையல்ல என்று கூறியுள்ளார். இவர் கடந்த 2 வருடங்களில் ஐந்து வெவ்வேறு சமயங்களில் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

- The Remnant Magazine.

## பாரம்பரிய திருப்பலியில் பங்கேற்பது பாவமல்ல !

நீண்டகாலம் எக்ளேசியே தேயி கமிஷனின் செயலாளராக இருந்த அதி.சங். காமில் பேர்ழ் என்பவர் அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையின் பாரம்பரிய திருப்பலியில் பங்கேற்பது பாவமோ, தண்டனைக்குரியதோ அல்ல. ஞாயிறு பூசைகளில் பங்கேற்கும் விசுவாசிகள் தங்கள் ஞாயிறு கடமைகளை நிறைவேற்றியவர்களாவார்கள் என்று தமது கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார்.

- The Remnant Magazine.

## சப்-தியாக்கோன் பட்டம் பெற்ற இந்திய குரு மாணவர் !

இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த சங்.திரு. கிரகோரி என்ற குரு மாணவர் கடந்த மார்ச் 9-ஆம் நாளன்று ஆஸ்திரேலியாவிலுள்ள அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் திருச்சிலுவை குருமடத்தில் சபையின் பொது அதிபர் வந். ∴பெல்லே ஆண்டகையவர்களால் சப்-தியாக்கோன் பட்டம் வழங்கப்பட்டார்.

**- புதிய சப்-தியாக்கோனுக்கு வாழ்த்து கூறி அவருக்காக ஜெபிப்போம்.**

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும்:

**பாளையங்கோட்டை:**

அர்ச். தமத்திருத்துவ குருக்கள் இல்லம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389; 2586201.

**சிங்கம்பாறை :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை. முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**கிறீஸ்துராஜபுரம் :**

கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04651 - 294785.

**நாகர்கோவில் :**

இராமன்புதூர்,
தொலைபேசி எண்: 0462 - 2572389.

**தூத்துக்குடி :**

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம் :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிபள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி :**

No-7, ஜவஹர் தெரு, 15-வது குருக்குச்சாலை,
குமரன் நகர், திருச்சி - 17
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை :**

அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்,
சின்ன மலை, சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.

Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com